**கிழக்கு மாகாண நீர்வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டம் (கிராமிய நீர் வழங்கல் கூறு) -2013**

கிழக்கு மாகாண நீர்வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவரிற்கும் (ஜெஐசீஏ) இடையில் கைசாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல் பி 98 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4.08(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

கிழக்கு மாகாண நீர்வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, கிழக்கு மாகாண சபை செயற்திட்டத்தின் கிராமிய நீர் வழங்கல் கூறு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. கிழக்கு மாகாணத்தில் நீர்வழங்கல் வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் விரிவாக்குதல் என்பவற்றின் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதுடன் அதன் மூலம் அப்பகுதியில் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்கும் வறுமையை குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஜப்பான் ஜென் 6,054 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஜப்பான் ஜென் 4,904 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவரினால் நிதியளிக்கப்பட இருந்ததுடன் மிகுதிக் கிரயம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், இந்தக் கூறிற்காக ஜ.யென் 924 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஜ.யென் 764 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவரால் நிதியளிக்கப்பட வேண்டியுள்ளதுடன் மிகுதிக் கிரயம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டியுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்ட காலம் 2014 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறள் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு

அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நொக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட ஜென் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட ஜென் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 488,715,310 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,027,670,755 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| கூறுகள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைககள் | 399,623,857 | 334,710,045 | 734,333,902 |
| ஆலோசனை சேவைகள் | 35,068,943 | 38,203,167 | 137,877,649 |
| மோட்டார் வாகனங்கள் | - | - | 6,384,000 |
| நிர்வாகக் கிரயம் | 21,843,705 | 17,197,370 | 55,653,990 |
| வரி | 32,178,805 | 34,359,379 | 74,290,849 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | - | 7,156,048 | 14,952,848 |
| வட்டி | - | 4,091,808 | 4,177,517 |
| மொத்தம் | 488,715,310 | 435,717,817 | 1,027,670,755 |

### 4.2 விசேட ஜென் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான விசேட ஜென் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அக் கணக்கில் இருக்கும் மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | ஐ.ஜென் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 65,375,658 | 96,749,436 |
| கூட்டு: | | |
| மீளளிப்புகள் | 244,102,654 | 322,472,734 |
| | 309,478,312 | 419,222,170 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் | 303,575,200 | 400,999,993 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 10,867,490 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 5,903,112 | 7,354,687 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5..1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களிலிருந்து பிடி காசாக கழிக்கப்பட்ட ரூபா 39,729,469 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, சிவில் வேலைகளின் மொத்தப் பெறுமதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாட்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டு ஏற்பாட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு- 2013 | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய தொகை |
|---|---|---|---|---|---|
| | ஐ.ஜென் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஜேஐசீஏ | 764,000,000 | 972,010,178 | 493,500,000 | 434,692,800 | 878,595,551 |
| ஜீஓஎஸ்எல் | 160,000,000 | 203,562,340 | 91,200,000 | 54,022,510 | 149,075,204 |
| மொத்தம் | 924,000,000 | 1,175,572,518 | 584,700,000 | 488,715,310 | 1,027,670,755 |

### 6.2. பௌதீக செயலாற்றல்

#### 6.2.1. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குழாய்களின் வழங்கலும் பொருத்துதலும்

செயற்திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் ரூபா 34,481,034 கிரயத்தில் கொக்கட்டிச்சோலை மற்றும் போரைதீவில் இணைந்த சிவில் வேலைகளுடன் குழாய் வழங்கல் மற்றும் பொருத்துதலிற்கு 2012 மார்ச் 21 இல் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையொன்று கைசாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்த உடன்படிக்கை திகதியிலிருந்து 165 நாட்களிற்குள் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 593 நாட்கள் கடந்த பின்னரும் கூட வேலைகளின் 80 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டமானது 2014 சனவரி 26 இலிருந்து ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரின் தொழில்நுட்பம் மற்றும் நிதி இயலளவுகள் ஆரம்ப கட்டத்தில் வேண்டப்பட்ட இயலளவு மதிப்பிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 1,724,052 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீதி வேலைகள் ரூபா 7,747,809 இற்காக புதிய ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் விரிவான வேலைத் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிவில் வேலைகளின் நிர்மாணம்

---------------------------------------------------

செயற்திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் ரூபா 27,000,015 கிரயத்தில் கொக்கட்டிச்சோலை மற்றும் போரைதீவில் தண்ணீர் கோபுரம், குழாய் கிணறு தோண்டல், நீர் இறைக்கும் இயந்திரம் இல்லம் மற்றும் அலுவலக கட்டிடம் போன்ற அத்தகைய சிவில் வேலைகளின் நிர்மாணத்திற்காக 2012 மே 10 இல் இல் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையொன்று கைசாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டமானது சிவில் வேலைகளின் ஒப்பந்தகாரரின் கடந்கால அனுபவம் மற்றும் நிதி இயலளவு என்பவற்றினை முறைப்படி மதிப்பிடாமல் ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தத்தை வழங்கியிருந்ததுடன் ஒப்பந்தகாரர் 458 நாட்கள் கடந்த பின்னரும் வேலைகளின் 50 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பின்னர், செயற்திட்டமானது ரூபா 5,400,000 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பண கொடுப்பனவு மற்றும் ரூபா 9,181,117 தொகையான இடைக்கால கொடுப்பனவுகளின் பின் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தத்தை இடைநிறுத்தியிருந்தது.

(ii) மீதி வேலைகள் முறையே ரூபா 26,562,708 மற்றும் ரூபா 11,384,676 இற்காக இரண்டு வேறு ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்படுகின்ற ஒப்பந்தங்கள் மூலம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இதன்படி, செயற்திட்டமானது வேலையை பூர்த்தி செய்வதற்கு ரூபா 20,128,661 தொகை மேலதிகமாக செலவழிக்கப்பட்டிருந்தது.

(iii) உரிய பாதுகாப்பு பிணைமுறியிலிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டிய ரூபா 2,854,253 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.2.2. 450 கனமீற்றர் மழைநீர் இணைப்பு தண்ணீர் கோபுரத்தின் நிர்மாணம்**

---------------------------------------------------

திருகோணமலையில் புல்மோட்டை நகரத்தில் ரூபா 25,203,192 கிரயத்தில் மழை நீர் இணைப்பு தண்ணீர் கோபுர நிர்மாணத்திற்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், தண்ணீர் கோபுர நிர்மாணம் 2013 பெப்ரவரியில் இருந்து 330 நாட்களிற்குள் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண வேலை 2014 மே 28 இல் கணக்காய்வு பரிசோதனை திகதி வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தண்ணீர் கோபுரம் அடிப்பாகத் தட்டில் ஆறு இடங்களில் தண்ணீர் கசிவுகள் உள்ளன என்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆலோசனையாளரால் இக் கசிவுகளிற்கான காரணங்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. ஆதலால், வேலைகள் ஆலோசனையாளரால் முறையாக மேற்பார்வை செய்து கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை குறிக்கின்றது.

(இ) வேறொரு தன்யார் கம்பனிக்கு உப ஒப்பந்தம் வழங்குவதன் மூலம் ஒப்பந்தகாரரால் தண்ணீர் கசிவுகள் திருத்தப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் தண்ணீர் கோபுரத்தின் வேறு இடங்களில் தண்ணீர்க் கசிவுகள் எழமாட்டாது என்பதற்கான சாத்தியத் தன்மை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.